


**14. 03. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மதுரை விமான நிலையத்தில் உயர் தொழில்நுட்ப கோபுர பயன்பாட்டை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

2. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூடுதலாக 48 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணை விநியோகம் செய்யப்படும் என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அறிவித்துள்ளது.

3. தமிழகத்தில் மின்சார அடுப்பை பயன்படுத்தும் உணவகங்கள் மற்றும் தேனீர் கடைகளுக்கு மானியம் வழங்கப்படும் என மாநிலஅரசு கூறியுள்ளது.

4. மாற்றுத்திறனாளிகளின் சுயசார்பை உறுதிசெய்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

5. மகளிர் உலக கோப்பை ஹாக்கி தகுதிசுற்று இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு அரசு உயர்முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் ஷில்ச்சாரில் 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், இப்பகுதி இளையோர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

எழுச்சிமிகு கிராமம் இயக்கத்தின் கீழ் எல்லையோர கிராமங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் கூறினார்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகவும், Tuticorin விமான நிலையம் இனி தூத்துக்குடி விமான நிலையம் என அழைக்கப்படும் என்ற அறிவிப்பையும் பிரதமர் வெளியிட்டார்.

முன்னதாக மதுரை விமான நிலையத்தில் அதி நவீன தொழில்நுட்ப கோபுர செயல்பாடுகளை காணொலி மூலம் பிரதமர் தொடங்கிவைத்தார்.

மதுரையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை இணை அமைச்சர் திரு.முரளிதர் மோஹோல், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மதுரை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்ட நிலையில், இங்கிருந்து பல்வேறு உலக நாடுகளுக்கான நேரடி விமான

போக்குவரத்து மேம்படுவதுடன் மக்கள் தொடர்பு வலுப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

தென் தமிழகத்தின் பொருளாதார மேம்பாடு கலாச்சார உறவுகளை வலுப்படுத்தவும் இது வகை செய்யும்.

************

<u>சுஜாதா ஷர்மா</u>

நாடுமுழுவதும் வீடுகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற அத்யாவசிய சேவைகளுக்கு தடையற்ற எரிபொருள் விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா ஷர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்காசிய நிலவரம் மற்றும் எரிவாயு விநியோக இடைவெளியை சரிசெய்ய உள்நாட்டு இயற்கை எரிவாயு உற்பத்தி 30 சதவிகிதத்திற்கும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும் மாநிலங்களுக்கு கூடுதலாக 48 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்படும் என அறிவித்தார்.

************

<u>கிரண் ரிஜிஜூ</u>

நாட்டில் நலிவடைந்த சிறுபான்மையின சமூகத்தினரின் நலன்களை உறுதிசெய்ய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் அனைவரையும் உள்ளடக்கிய அனைவருக்குமான வளர்ச்சியை கருத்தில் கொண்டு வெளிப்படையான சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளை அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

************

ஐ.என்.எஸ். சுதர்சினி

இந்திய கடற்படை பயிற்சி கப்பல் ஐ.என்.எஸ். சுதர்சினி ஐரோப்பிய தீவு நாடான மால்டா சென்றடைந்தது.

நட்பு ரீதியான இந்த கடல் பயணத்தின் மூலம் இந்தியா மற்றும் மால்டா இடையேயான பாதுகாப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

மேலும் இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள அனைத்து நாடுகளிலும் மக்கள் தொடர்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை என மத்திய அரசு அறிவித்துள்ளது.

************

க்ரயோஜனிக்

நாட்டின் மேம்பட்ட க்ரயோஜனிக் உந்து விசை திறன்களை வலுப்படுத்துவதில் LVM 3 திட்ட சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதற்கு மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் 22 டன் எடையுள்ள CE -20 க்ரயோஜனிக் எஞ்சின் சோதனை வெற்றி உள்நாட்டு தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதாக கூறினார்.

************

பத்திரிக்கை தகவல் அலுவலகம்

பிரதமரின் மடி கணினி திட்டத்தின் கீழ் அனைத்து மாணாக்கருக்கும் இலவச மடி கணினிகள் அல்லது 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுவதாக சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை என மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

மத்திய அரசின் திட்டங்கள் குறித்த அதிகாரப்பூர்வமான தகவல்களை பொதுமக்கள் மற்றும் மாணாக்கர் myscheme.gov.in என்ற இணையதளத்தில்

தெரிந்துகொள்ளுமாறு பத்திரிக்கை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

************

<u>லோக் அதாலத்</u>

தமிழகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் இன்று நடைபெறுகிறது.

வாகன விபத்து இழப்பீடு, ஜீவனாம்சம் காசோலை மோசடி உள்ளிட்ட நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இதில் சமரச தீர்வு எட்டப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் தேசிய மக்கள் நீதிமன்றத்தில் நடைபெற்ற லோக் அதாலத்தில் வாகன விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீட்டு தொகை பெறப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் 18 அமர்வுகளில் நடைபெற்ற லோக் அதாலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

************

<u>ராதாகிருஷ்ணன்</u>

தமிழகத்தில் உணவகங்கள் தேனீர் கடைகளில் மின்சார அடுப்புகள் பயன்படுத்தினால் மானியம் வழங்கப்படும் என மின்வாரிய தலைவர் டாக்டர் ஜே. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் எரிவாயு தட்டுப்பாடு இடர்பாடுகளை நீக்குவது தொடர்பாக இன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்காசிய நிலவரத்தால் மாநிலத்தில் வணிக எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இடைவெளியை சரிசெய்யும் வகையில் அதிக அளவில் மின்சார அடுப்புகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்காக உணவகங்கள் மற்றும் தேனீர் கடைகளுக்கு ஒரு யூனிட்டுக்கு இரண்டு ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நிலமை சீராகும் வரை இந்த மானிய உதவி தொடரும் என்றும் அறிவித்தார்.

குடும்ப அட்டை தாரர்களுக்கு இம்மாதத்திற்கான பொதுவிநியோக திட்டத்தின் கீழ் கூடுதலாக 3 ஆயிரத்து 228 கிலோ லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்படும் என்றார்.

கள்ளச்சந்தையில் சிலிண்டர் விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாடு குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

************

<u>துணை முதலமைச்சர்</u>

மகளிர் சுய உதவிக்குழுவினரின் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூரில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இன்று வழங்கி பேசிய அவர், அரசின் சிறப்பான நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக கூறினார்.

மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு மற்றும் மாநிலத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்யும் அரசின் திட்டங்களையும் துணை முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

************

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் தொடங்குவதற்கான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 37 மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர வாகனம், 6 மகளிருக்கு திருமண நிதி உதவி உள்ளிட்டவற்றை வழங்கி பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

************

கள்ளக்குறிச்சி

பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

……. வாய்ஸ் ………

************

அரியலூர்

பாமாயில் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு மானிய உதவிகளை வழங்கி வருவது தங்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக அரியலூர் மாவட்ட விவசாயி தெரிவிக்கையில்,

************

தென்காசி

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் இயற்கை வள பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

விமானம்

சென்னை துபாய் இடையே இன்று இரவு சிறப்பு விமானம் இயக்கப்பட உள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது.

மேற்காசிய நிலவரத்தால் பல்வேறு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில், ஏற்கனவே முன்பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

************

ஹாக்கி

ஹைதராபாத்தில் நடைபெறும் மகளிர் உலக கோப்பை ஹாக்கி தகுதிசுற்று இறுதி ஆட்டத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு இந்தியா – இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது